# இந்திய சரித்திரக் களஞ்சியம்



ப. சிவனடி

# இந்திய சரித்திரக் களஞ்சியம்

1721—1730

மூன்றாம் தொகுதி

சீனம், நடு ஆசியா, பிரிட்டன்,
பெங்களூர், ஐதராபாது,
பூனா—நாடு, நகரங்கள்—
அரசியல் தந்திரி,
அறிவியல் மேதை,
பொருளியலறிஞர்
மாவீரர், மாமன்னர்
நிலைய பத்தாண்டுக்கால
ஒப்பியல் வரலாறு

ப. சிவனடி

சித்தார்த்தன் புத்தகங்கள்
சென்னை

# அறிவுக் களஞ்சியமா ?
# சரித்திரக் களஞ்சியமா ?

★

உலக அரங்கில், அது உண்டான காலந் தொட்டுப் பண்டு நிகழ்ந்தன அனைத்தும், காலமெனும் பெருவெளியில் பல்லுயிரும், அவற்றுள் தலையாய மனிதனும், எண்ணங்களால், சிந்தனையால், செயல்களால், காலத்தையும் கடந்து நிற்கும் வண்ணம் பதித்த சுவடுகள் எல்லாம் ஒருங்கே கூட்டப்பட்டுள்ளதால் அறிவுக் களஞ்சியம் என்றும்,

மானுட ஏற்றத்தின் உந்து விசையாக அமைந்த வெகு சில மையங்களுள் ஒன்றானதும், உலகிற்கு ஞான ஒளியை வழங்கியதுமான இந்தியாவை நிலைப் புள்ளியாகக் கொண்டு, காலத்தின் முன்னும் பின்னும் ஏகி, உலக வரலாற்றுக் காட்சிகளைக் காட்டுவதால் சரித்திரக் களஞ்சியம் என்றும், **இந்திய சரித்திரக் களஞ்சியம்** என்றும் இந்நூல் வரிசையைக் கொள்ள வேண்டும்.

இத்தொகுதியில் பதினெட்டாம் நூற்றாண்டின் மூன்றாம் பத்தாண்டு வரலாற்றைப் ப. சிவனடி, அறிவு வேட்கையைத் தூண்டும் தேன் மொழியில், திகட்டாத நடையில் படைத்திருக்கும் இந்நூல், அனைவரும் படித்து எண்ணவுயர்வு பெறுவதற்குத் துணை புரியும்.

★

**தமிழில் இது மாபெரும் புது முயற்சி**